# முதன்மை மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்

**முன்னிலை: திருமதி. A.முத்துசாரதா, B. L., P.G.D.P.M.**
**முதன்மை மாவட்ட நீதிபதி, திண்டுக்கல்**

2025 ம் ஆண்டு ஜீலை திங்கள் 22 ம் நாள் செவ்வாய்கிழமை

**அசல் வழக்கு எண்.93/2021–ல் இ.ம.எண் 01/2024**

1. R. ஜெயசந்திரன்
2. J. சிவகாமி

.... மனுதாரர்கள்/ 1,2 பிரதிவாதிகள்

/ எ தி ர் /

R. ஜெயகொடி

.... எதிர்மனுதாரர்/வாதி

இம்மனு என் முன்னர் 10.07.2025 ம் நாளன்று இறுதி விசாரணைக்கு வந்த போது மனுதாரர்கள்/ 1,2 பிரதிவாதிகள் தரப்பில் திரு. T.சிவசந்திரன், திரு.S.நாகராஜ், திரு.C.இளமுருகன் வழக்கறிஞர்களும், எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் திரு. M.ராமலிங்கம், வழக்கறிஞரும் முன்னிலையாகியும், மனு உரை, எதிருரை மற்றும் பிற தொடர்புடைய ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டும், இரு தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும் இன்று வரை என் பரிசீலனையிலிருந்து இன்று இம்மன்றத்தால் பிறப்பிக்கப்படும் :

## உத்தரவு

அசல் வழக்கில் 03/01/2024 ம் தேதி மனுதாரர்கள்/ 1,2 பிரதிவாதிகளுக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச தீர்ப்பாணையை

ரத்துச் செய்ய ஏற்பட்ட 189 நாட்கள் காலதாமதத்தை மன்னித்து ஒருதலைபட்ச உத்தரவை ரத்துச் செய்யக்கோரி தாக்கல் செய்யப்பட்ட மனுவினை ஏற்றுக்கொள்ள உத்தரவிடக்கோரி மனுதாரர்களால் காலவரையறைச் சட்டம் பிரிவு 5–ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனு.

2) <u>மனுதாரர்களின் மனுவுடன் கூடிய பிரமாண வாக்குமூலச் சுருக்கம் பின்வருமாறு</u> :–

எதிர்மனுதாரர் 1ம் மனுதாரரின் சகோதரி. பாகப்பிரிவினை கோரி அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு, அதில் 3.1.2024ம் தேதி ஒருதலைபட்ச தீர்ப்பாணை ஏற்பட்டுள்ளது. மேற்படி தீர்ப்பாணை ஏற்பட்ட விபரம் மனுதாரர்களுக்கு தெரியாது. 1ம் மனுதாரருக்கு மஞ்சள்காமாலை ஏற்பட்டு வீட்டிலேயே தங்கி நாட்டுமருந்து சிகிச்சை எடுத்து வந்த காரணத்தால் அசல் வழக்கு பற்றிய விபரம் மனுதாரர்களுக்கு அறிய இயலவில்லை. இந்நிலையில் கடந்த 01.08.2024–ம் தேதி மனுதாரர்கள் வழக்கறிஞரை சந்தித்த போதுதான் வழக்கு ஒருதலைபட்சமாக தீர்ப்பான விபரமே தெரிய வந்துள்ளது. மேலும் உரிய காலத்திற்குள் ஒருதலைபட்ச தீர்ப்பை ரத்து செய்ய மனு தாக்கல் செய்ய இயலாமல் 184 நாட்கள் காலதாமதம் ஏற்பட்டுவிட்டது. தாவா சொத்துகள் சம்மந்தமாக வேடசந்தூர் சார்பு நீதிமன்றத்தில எதிர்மனுதாரர்/வாதியின் அத்தை ராமாயி அம்மாள் தாக்கல் செய்த பாக வழக்கு O.S.NO.241/2021 நிலுவையில் உள்ளதை மறைத்து இந்த எதிர்மனுதாரர்/வாதி பெற்றுள்ள தீர்ப்பு

செல்லத்தக்கதல்ல. ஆகையால், அசல் வழக்கில் மனுதாரர்களுக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச தீர்ப்பாணையை ரத்துச் செய்ய ஏற்பட்ட 189 நாட்கள் காலதாமதத்தை மன்னித்து மனு அனுமதிக்கவேண்டும்.

3) <u>எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரை சுருக்கம்:</u>–

தாவா சொத்துக்களில் எதிர்மனுதாரர்/வாதிக்கு உள்ள 4/9 பாகத்தை பிரித்து தனித்த சுவாதீனம் கோரியும், தாவா 1 to 3 லக்க சொத்துக்களை பொறுத்து 1, 2 மனுதார்கள்/1,2 பிரதிவாதிகள் மோசடியாக உற்பத்தி செய்துள்ள 22.10.2020 ம் தேதிய தான செட்டில்மெண்ட் ஆவணம் செல்லத்தக்கதல்ல என விளம்புகை செய்ய கோரியும், எதிர்மனுதாரர்/வாதியின் பாகத்தை பிரித்து பெறும் வரை பிரிவினையில்லாத தாவா 5 லக்க சொத்திற்கு உண்டான வாடகையை வசூலிக்கவும் வழக்கு தாக்கல் செய்திருந்ததில் கடந்த 03.01.2024–ம் தேதியில் எதிர்மனுதாரருக்கு பிராதில் கோரிய பரிகாரங்களை வழங்கி தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. மனுதாரர்கள் இருவரும் கணவன் மனைவி ஆவார்கள் மற்றும் அவர்கள் நல்ல உடல்நிலையுடன் இருக்கிறார்கள் அவர்களுக்கு எந்த மஞ்சள்காமாலை நோயும் இல்லை. மனுதார்கள், 4–ம் பிரதிவாதி செலுத்தி வரும் வாடகையை பெற்று வருவதில் அதில் எதிர்மனுதாரருக்குரிய ஈவு தொகையை கொடுக்காமலும், தாவா சொத்துக்களில் எதிர்மனுதாரருக்குரிய பாகத்தை பிரித்துக் கொடுக்காமலும் காலம் கடத்தவே பொய்யாக இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார்கள். மனுதார்கள்/1,2 பிரதிவாதிகள் உரிய காலத்தில் எந்த

நடவடிக்கையும் எடுக்காமல் இருந்து விட்டு காலதாமதமாக தாக்கல் செய்துள்ள இம்மனு சட்டப்படி நிலைநிற்கத்தக்கதல்ல. ஒருக்கால் நீதிமன்றம் தாவா மனு அனுமதிக்க வேண்டியது அவசியம் என கருதும்பட்சம், பிராது தேதி முதல் 36 மாதங்கள் மனுதார்கள் 4–ம் பிரதிவாதியிடம் பெற்று வந்த வாடகை தொகை ரூ.1,80,000/–யை நீதிமன்றத்தில் வைப்பீடு செய்யவும், தாவா வழக்கை day to day விசாரிக்கவும் மனுதார்கள் ஒப்புக்கொள்ளும் பட்சம், மேற்படி நிபந்தனைகளுடன் தாவா மனுவை அனுமதிக்க வேண்டியது அவசியமாக உள்ளது. எனவே, இம்மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும்.

**4)** இம்மனுவில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை யாதெனில், இம்மனு அனுமதிக்கப்படத்தக்கதா? என்பதேயாகும்.

**5)** இரு தரப்பிலும் சாட்சிய, சான்றவாணம் ஏதும் முன் வைக்கப்படவில்லை.

**6)** இரு தரப்பு வாதங்களும் கேட்கப்பட்டன. மனு உரை, அபிடவிட், எதிருரை பரிசீலிக்கப்பட்டன.

**7)** **<u>பிரச்சனைக்குரிய தீர்வு</u>** :–

மனுதாரர்கள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் தன் வாதுரையில் எதிர்மனுதாரர் 1ம் மனுதாரரின் சகோதரி என்றும், பாகப்பிரிவினை கோரி அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு, அதில் 3.1.2024ம் தேதி ஒருதலைபட்ச தீர்ப்பாணை ஏற்பட்டுள்ளதாகவும், வழக்கு விசாரணையின்போது 1ம் மனுதாரருக்கு மஞ்சள்காமாலை நோய் ஏற்பட்டு வீட்டிலேயே தங்கி

நாட்டுமருந்து சிகிச்சை எடுத்து வந்த காரணத்தால் அசல் வழக்கு பற்றிய விபரத்தை அறிய இயலவில்ல என்றும், அதனால் அசல் வழக்கில் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணையை ரத்துச் செய்ய மனுத் தாக்கல் செய்ய 184 நாட்கள் காலதாமதமாகிவிட்டதாகவும், தாவா சொத்துகள் சம்மந்தமாக வேடசந்தூர் சார்பு நீதிமன்றத்தில எதிர்மனுதாரர்/வாதியின் அத்தை ராமாயி அம்மாள் தாக்கல் செய்த பாக வழக்கு O.S.NO.241/2021 நிலுவையில் உள்ளதை மறைத்து இந்த எதிர்மனுதாரர்/வாதி பெற்றுள்ள தீர்ப்பு செல்லத்தக்கதல்ல என்றும், ஆகையால், மனு அனுமதிக்கப்படவேண்டும் என்றும் வாதிடப்பட்டது.

8) எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் வாதத்தின்போது மனுதாரர்கள் இருவரும் நல்ல உடல்நிலையுடன் இருப்பதாகவும், 4–ம் பிரதிவாதி செலுத்தி வரும் வாடகையை பெற்று அதில் எதிர்மனுதாரருக்குரிய ஈவு தொகையை கொடுக்காமலும், தாவா சொத்துக்களில் எதிர்மனுதாரருக்குரிய பாகத்தை பிரித்துக் கொடுக்காமலும் காலம் கடத்தவே பொய்யாக இந்த மனுவை தாக்கல் செய்துள்ளதாகவும், பிராது தேதி முதல் 36 மாதங்கள் மனுதார்கள் 4–ம் பிரதிவாதியிடம் பெற்று வந்த வாடகை தொகை ரூ.1,80,000/–யை நீதிமன்றத்தில் வைப்பீடு செய்யவும், தாவா வழக்கை day to day விசாரிக்க மனுதார்கள் ஒப்புக்கொள்ளும் பட்சத்தில் நிபந்தனைகளுடன் இம்மனு அனுமதிப்பதில் ஆட்சேபணை இல்லை என்றும் வாதிடப்பட்டது.

9) அசல் வழக்கானது எதிர்மனுதாரரால் தாவாச் சொத்துக்களில் தனக்குரிய 4/9 பாகத்தை பிரித்துத் தரக் கோரியும், 22.10.2020ம் தேதியிட்ட தானசெட்டில்மெண்ட் பத்திரம் செல்லத்தக்கதல்ல என விளம்புகைப் பரிகாரம் கோரியும், தாவாச் சொத்துக்களைப் பொறுத்து நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரமும், தாவா 5வது லக்கச் சொத்திற்குரிய வாடகைத் தொகையை 4ம் பிரதிவாதி நீதிமன்றத்தில் வைப்பீடு செய்ய செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் பிறப்பிக்கக்கோரியும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது அசல் வழக்கில் மனுதாரர் /பிரதிவாதிக்கு எதிர்வழக்குரை தாக்கல் செய்ய போதுமான வாய்ப்பளித்தும் எதிர்வழக்குரை தாக்கல் செய்யாததால் 22.04.2021ம் தேதி மனுதாரர்கள் அழைக்கப்பட்டும் அஜரில்லாததால் தோன்றாத் தரப்பினர்களாகக் கருதப்பட்டு, 3.1.2024ம் தேதி ஒருதலைபட்ச தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. மனுதாரர்கள் தரப்பில் 1ம் மனுதாரருக்கு மஞ்சள்காமாலை நோய் ஏற்பட்டு நாட்டுமருந்து சிகிச்சை எடுத்துக்கொண்டதால் தங்களது வழக்கறிஞரை நேரில் சந்திக்க செல்ல இயலவில்லை என்றும், வழக்கில் தீர்ப்பு ஏற்பட்ட விவரம் 1.8.2024ம் தேதி தெரிய வந்ததாகவும், ஒருதலைபட்ச தீர்ப்பாணையை ரத்துச் செய்யக் கோரி மனுத் தாக்கல் செய்ய 189 நாட்கள் காலதாமதம் ஏற்பட்டுள்ளதாக சொல்லப்பட்டு வருகிறது. எதிர்மனுதாரர் தரப்பில் மனுதாரர்கள் நல்ல உடல்நிலையுடன் இருப்பதாகவும், 4-ம் பிரதிவாதி செலுத்தி வரும் வாடகை தொகையில் எதிர்மனுதாரருக்குரிய ஈவு தொகையை கொடுக்காமலும், தாவா

சொத்துக்களில் எதிர்மனுதாரருக்குரிய பாகத்தை பிரித்துக் கொடுக்காமலும் காலம் கடத்தி வருவதாகவும், பிராது தேதி முதல் 36 மாதங்கள் மனுதார்கள் 4–ம் பிரதிவாதியிடம் பெற்று வந்த வாடகை தொகை ரூ.1,80,000/–யை நீதிமன்றத்தில் வைப்பீடு செய்யவும், தாவா வழக்கை day to day விசாரிக்க மனுதார்கள் ஒப்புக்கொள்ளும் பட்சத்தில் இம்மனுவினை அனுமதிக்கலாம் என எடுத்துரைக்கப்பட்டுள்ளது. அசல் வழக்கில் மனுதாரர்கள் தரப்பு சங்கதிகளை கேட்டறிந்து ஒரு முடிவுக்கு வருவதே நீதியின்பால் உகந்ததாக இருக்கும் என்பதால் மனுதாரர்களுக்கு ஒரு வாய்ப்பளிக்கும் பொருட்டும், இந்த மனுவை அனுதிப்பதால் எதிர்மனுதாரருக்கு பெருத்த கஷ்ட–நஷ்டம் ஏற்பட்டுவிடாது என்பதாலும் இந்த மனுவை செலவுத்தொகையுடன் அனுதிக்கலாம் என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**முடிவாக**, மனுதாரர்கள், எதிர்மனுதாரருக்கு செலவுத்தொகையாக ரூ.1000/–ஐ 29.07.2025 தேதிக்குள் செலுத்தும் பட்சத்தில் இம்மனு அனுமதிக்கப்படும் என்றும் தவறும்பட்சத்தில் இம்மனு தானாகவே தள்ளுபடி செய்யப்படும் என்றும் உத்தரவிடப்படுகிறது. அழைக்க வாய்தா– 30.07.2025

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்குச் சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2025ம் வருடம் ஜுலைத் திங்கள் 22ம் தேதியன்று இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

A MUTHUSARATHA
Digitally signed by A MUTHUSARATHA
Date: 2025.12.30 12:09:14 +0530

**முதன்மை மாவட்ட நீதிபதி,**
**திண்டுக்கல்.**

சாட்சிகள் – மற்றும் ஆவணங்கள்–
– இருதரப்பிலும் முன்னிலைப்படுத்தப்படவில்லை –

A MUTHUSARATHA Digitally signed by A MUTHUSARATHA Date: 2025.12.30 12:09:21 +0530

**மு மா நீ,**
**திண்டுக்கல்.**